# தொழிலாளி

மலர்: 4 இதழ்: 9 செப்டெம்பர் 1977 விலை சதம்: 50

## இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துச் செய்தி

"உங்களுடைய கட்சியின் 11-வது மாநாடு வெற்றிகரமாக முடிவுற்றதையிட்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. உங்களுக்கு சகல வெற்றிகளும் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்." மேற்கண்ட வாழ்த்துச் செய்தியை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் தந்தி மூலம் அனுப்பி வைத்தார்.

★ பொது மக்களுக்கு எதிரான பொலீஸ் அட்டூழியம்,
★ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியமை,
★ தமிழர் கூட்டணியின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே,

# இனக் கலவரத்தின் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற களியாட்ட விழாவில் பொலீஸ் - பொது மக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலையும், அதைத் தொடர்ந்து மூன்று நாட்களாக பொது மக்களுக்கு எதிராக பொலீஸ் நடத்திய அட்டூழியங்களையிட்டு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கத் தவறியது. அதே வேளை பொலீஸ் அட்டூழியங்களையிட்டு தமிழர் கூட்டணியினர் சரியான வழிகளில் மக்களுக்குத் தலைமை தாங்காது இனத்துவேச நடவடிக்கைகளைத் தூண்டி பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதுமே இனக்கலவரத்தின் ஆரம்பத்திற்கான காரணமாகும். அரசாங்கத்தினதும் - தமிழர் கூட்டணியினரதும் பொறுப்பற்ற நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதே போல் கலவரம் ஆரம்பித்ததும் அதை முடிவுக்குக் கொண்டு வருவதையிட்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் எதுவும் கூறாது நீண்ட மௌனம் சாதித்த அதேவேளை அரசாங்கத்தின் அறிக்கையும் இனக்கலவரத்தை மேலும் மோசமான [illegible]மைக்குக் கொண்டு வந்தது.

1958ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தின் பின் நாடு தழுவிய மோசமான இனக்கலவரம் அண்மையில் [illegible]பெற்றுள்ளது. நமது ளித்துவ-பிற்போக்கு சக்திகளும், இனவெறியர்களும், பிரிவினை வாதிகளும் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதை மனதார விரும்பியது மட்டுமன்றி அதற் உடமைகளையும் இழந்து தமது சொந்த நாட்டிலேயே 'அகதிகள்'' என்ற விசேஷ பெயருடன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ரவேண்டிய

காரணங்களை நாம் பார்க்காது விட்டால் இவ் இனக்கலவரத்திற்கான உண்மை நிலைமைகளைப புரிந்து கொள்ள முடியாது. வெள்ளைக்காரர்கள் நமது நாட்டிற்கு ''சுதந்திரம்'' கொடுத்து விட்டுச் சென்ற காலம் முதல் இரு இனங்களின் மத்தியிலான பிணக்குகளும், மனக்கசப்புகளும் வளர்ந்து கொண்டே வந்துள்ளன. நமதுநாட்டின் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற அமைப்பு முறையின் கீழ் வருடா வருடம் இனப் பிரச்சினை வளர்க்கப்பட்டு வந்துள்ளது. அடிப்படையில் சுரண்டல் அமைப்பைப் பாதுகாப்பதற்கான முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சிமுறை நாட்டின் சகல இன மக்களினதும் பொருளாதார, வேலை வாய்ப்பு, கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத இக்கட்டான நிலைமைகளில் சிறுபான்மை இனமான தமிழ் பேசும் மக்களின் மீது பாரபட்ச

கள இனத்தின் மத்தியிலுள்ள முதலாளித்துவ-பிற்போக்கு சக்திகள் யூ. என். பி யின் தலைமையின் கீழும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் கீழும் செய்து வந்துள்ளன. இவ்விதமான நடவடிக்கைகள் கல்வியையும்-அரசாங்க உத்தியோகங்களையும் மூலதனமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களின் ஒரு பிரிவினரையும், வெளி மாகாணங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பிரிவினரையும் கூடுதலாகப் பாதித்ததுடன், வடக்குக் கிழக்கில் வாழ்ந்த மக்கள் மத்தியிலும் இன அடக்கு முறைகளினுல் விரக்தி அடையும் ஒரு நிலையும் ஏற்பட்டது.

இவ்விதமான ஒருநிலையின் மறுபக்கம் தான் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள பிற்போக்கு சக்திகளின் அரசியல் தலைமையாகும். நமது நாட்டின் இனப் பிரச்சினையின் உண்மை நிலைமைகளைப் புரிந்து கொண்டு அதைத் தீர்ப்பதற்கு தேசிய ரீதியிலான முற்போக்கு [illegible]கர சக்திகளுடன் இணைந்த கொள்கைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக சிங்கள மக்கள் அனைவரையும் விரோதிக்கும் கொள்கைகளை தமிழ்த் தலைவர்கள் தீவிரமாக முன்னெடுத்தனர். நாம் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தது [illegible] சிங்கள வகுப்பு வா[illegible] வகுப்பு வாதத்தாலும், தமிழ் வகுப்பு வாதம் சிங்கள வகுப்பு வாதத்தாலும் தீனி போட்டு வளர்க்கப் பட்டது. இதன் உச்சகட்டமாக 1958ம் ஆண்

## தமிழ்மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்
## பிரிவினைக் கோரிக்கை கைவிடப்பட வேண்டும்!!

நாட்டில் உள்ள உண்மையான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகள், புரட்சிகர சக்திகள், நல்லெண்ணம் கொண்ட முற்போக்கு மக்கள் சகலரும் இப்படியான ஒரு இனக்கலவரம் ஏற்படுவதை சிறிதளவேனும் விரும்பவில்லை. ஆனல் இரு இனங்களின் மத்தியில் உள்ள முதலா காக வேலைகளும் செய்து வந்துள்ளனர். அண்மையில் ஏற்பட்ட மோசமான இவ் இனக்கலவரத்தால் இரு இனங்களைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் வாழ்ந்துவந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களில் பலர் உயிர்களையும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் இனக்கலவரம் ஒரு சில நாட்களுக்குள் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. இதற்கான மான நடவடிக்கைகளையும் திட்டமிட்ட குடியேற்றங்களையும், வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் மோசமான நடவடிக்கைகளை எடுத்து இன ரீதியிலான அடக்குமுறைகளைச் செய்து வந்துள்ளது. மேற்படி இன அடக்குமுறைகளுக்கான நடவடிக்கைகளை சிங் டில் நாடு தழுவிய இனக்கலவரமும் பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின் அடுத்த இனக் கலவரமும் நடைபெற்றுள்ளது.

கடந்த 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நாடு

4-ம் பக்கம் பார்க்க

## தலைவர் மாஓ சேதுங் அவர்களின் நினைவு தினம்!

மாபெரும் தலைவர் மாஓசே-துங் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு தினம் இம்மாதம் ஒன்பதாம் திகதியாகும். மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரைத் தொடர்ந்து உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கு சிறந்த வழிகாட்டியாக நமது சகாப்தத்தில வாழ்ந்த தோழர் மாஓ சே-துங் அவர்களை உலகத் தொழிலாளி வர்க்கத்துடனும், உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுடனும், மகத்தான சீன மக்களுடனும் சேர்ந்து நாம் அவரது முதலாவது சிரார்த்த தினத்தை ஞாபகப்படுத்துகின்றோம்.

தலைவர் மாஓ சேதுங் அவர்கள் நமது சகாப்தத்தில் வாழ்ந்த மாபெரும் மாக்சிஸ்ட்-லெனினிஸ்டும், மாக்சிச-லெனினிச தத்துவ மேதையும் ஆவார். அவர் பலநூறு ஆண்டுகளாக அடிமைத்தனத்திஞல் அமுக்கப்பட்டிருந்த சீன மக்களை விடுதலை செய்யும் மகத்தான போராட்டத்தில் சீன மக்களுக்கும், உலக மக்களுக்கும் அளப்பரிய சாதனைகளை வழங்கினர். தலைவர் மாஓ அவர்களின் அறிவு. ஆற்றல், அனுபவம் ஆகியவை சீனப் புரட்சிக்கு முன்பும், சீனப் புரட்சிக்குப் பின்பும் ஐந்து முக்கிய அம்சங்களில் மிகவும் தெட்டத் தெளிவாகக் காண முடியும். ஒன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை 1921ம் ஆண்டில் ஆரம்பித்து அக்கட்சியை பலம் மிக்கதும், புகழ் மிக்கதுமான ஒரு மாக்சிச-லெனினிசக் கட்சியாக வளர்த்தார். இரண்டாவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சீன செஞ்சேனையை உருவாக்கி சீன மக்களை விடுதலை செய்யும் மகத்தான மக்கள் விடுதலைச் சேனையாக வளர்ப்பதில் தலைமை தாங்கினர். மூன்ருவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், செஞ்சேனைக்கும் சரியான தலைமை கொடுத்ததின் மூலம் 1949ம் ஆண்டில் சீன மக்கள் குடியரசை உருவாக்கி உலகத்த விடுதலையும், சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட சீன மக்கள் குடியரசைப் பிரகடனப்படுத்தியதில் தலைமை தாங்கினர். நான்காவது அறுபதாம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தை நாசப்படுத்த முயன்ற குருசேவ் தலைமையிலான நவீன திரிபுவாதத்திற்கு எதிராக அடிக்கு அடி கொடுத்த போராட்டத்தில் உலகின் மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுகளுக்கும், புரட்சிகர சக்திகளுக்கும் தலைமை தாங்கி நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகத் திகழ்ந்தார். ஐந்தாவதாக சோவியத் யூனியனில் சோஷலிச அமைப்பு நவீன திரிபுவாதத்தால் விழுங்கப்பட்ட நிலைமைகளில் இருந்து பெறப்பட்ட அனுபவங்களைத் [illegible] சில தேசத்தில் மகத்தான கலாச்சார புரட்சியை [illegible] வழி நடத்துவதிலும் தலைமை தாங்கினர்

தலைவர் மாஓ சேதுங் அவர்கள் சீன தேசத்தின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ப மாக்சிச லெனினிசத்தை நடைமுறைப்படுத்தியது மட்டுமல்லாது அதை நமது சகாப்தத்திற்குப் பொருந்தும் வகையில் ஒரு உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தார். அந்த வளர்ச்சி தான் இன்று சர்வ தேசத்திலும் மகத்தான மாசேதுங் சிந்தனையாகத் திகழ்கின்றது. மாசேதுங் சிந்தனையின் தவறற்ற பதாகையின் கீழ் உலகின் தொழிலாளி வர்க்கமும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் மேலும் பலவெற்றிகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. எமது நாட்டு மக்களின் விடுதலைக்கான மார்க்கத்தில் வேலை செய்து வரும் மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுகளாகிய நாம் மாக்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனைப் பதாகையை உயர்த்திப் பிடித்து அதன் மாசற்ற உண்மைகள் காட்டும் வழிகளில் மேலும் உறுதியாக முன்செல்ல வேண்டும். தலைவர் மாஓ சேதுங் அவர்களின் நினைவாக தொடர்ந்தும் எமது கட்சியின் தலைமையின் கீழ் அரசியல், ஸ்தாபன, வேலைகளை ஆழமாக்கி முன்செல்வோம் என உறுதி கொள்வோமாக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# த. கூட்டணியே பொறுப்பேற்க வேண்டும்!

இன-மொழி அடிப்படையில் இளைஞர்களை உணர்ச்சி வசப்படுத்தி அவர்களை முன் யோசனையற்ற, நிதானமற்ற நடவடிக்கைகளுக்குத் தூண்டுவதில் கைதேர்ந்தவர்கள் தமிழர் கூட்டணியினர். ஆனால் நிலைமைகள் மோசமடைந்ததும் தமக்கும் அச்சம்பவங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறி அப்பட்டமாகவே அறிக்கை விட்டுத் தப்பித்துக் கொள்வதும் அவர்களது இயல்பான குணமாகும். கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் தமிழர் கூட்டணியினருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தேசிய அரசுப் பேரவையில் திரு அ. அமிர்தலிங்கம் திருவாய்மலர்ந்தருளினார். அதே போல் கிளிநொச்சித் தொகுதிப் பேரவை உறுப்பினர் திரு ஆனந்தசங்கரி துண்டுப் பிரசுரத்தின் மூலம் தமக்கும் காடைத்தனங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறி பொலீசாருடனும் ராணுவத்துடனும் ஒத்துழைக்கும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணச் சம்பவங்களுக்கும் தமிழர் கூட்டணியினருக்கும் நிறையச் சம்பந்தம் உ[illegible]டென்று நாம் அடித்துக் கூ[illegible]ன்றோம். ஆகஸ்ட் 13ம், 14ம், 15ம் திகதிகளில் பொது மக்களுக்கு எதிராகப் பொலீஸ் அட்டூழியம் இடம்பெற்றது என்பது உண்மையே. இப்பொலீஸ் அட்டூழியத்தால் 16ம் திகதி காலை பொது மக்கள் ஆத்திரப்பட்ட நிலையில் காணப்பட்டதும் உண்மையே.

பொது மக்களின் நியாயமான ஆத்திர உணர்வுகளை தமிழர் கூட்டணியினர் பொலீஸ் அட்டூழியத்திற்கு எதிரான வெகுஜன எழுச்சியாக மாற்றுவதற்குப் பதிலாக இனவெறிக் கோஷத்தைக் கிளப்பி தமது இனவெறிப் பசிக்கு இரை தேட முற்பட்டனர். இந்த இனவெறிக் கோஷத்தின் பின்னால் திரண்ட, ஏற்கனவே தேர்தல் மேடைகளின் மூலம் ஏற்றி வைத்திருந்த இனவெறி உணர்வுகள் கொண்ட கூட்டம் சிங்களக் கடைகளையும் பேக்கரிகளையும் உடைப்பதிலும், கொள்ளையடிப்பதிலும் கொண்டு சென்று விட்டதை எவராலும் மறுக்க முடியாது. 16ம் திகதிச் சம்பவங்களில் நேரடியாக பல தமிழர் கூட்டணியின் இளம் பிரமுகர்கள் கலந்து கொண்டதை சகல மக்களும் அறிவார்கள். சில சந்திகளில் கடைகள் உடைக்கப்பட முன்பலர் இதனுடைய விளைவுகளை எடுத்துக் கூறி இச்சம்பவங்களைத் தடுக்க முயற்சிகள் கூட எடுத்தனர். ஆனால் அந்த முயற்சிகளை எல்லாம் மீறி விளைவுகளைப் பற்றி சிறிது கூட யோசிக்காது கடைகளை உடைப்பதிலும் கொள்ளையடிப்பதிலும் அந்தக் கூட்டம் செயல்பட்டது. அன்றைய தினம் இரவு கொழும்புக்குச் சென்ற சிங்களவர்கள் தாக்கப்பட்டிருந்தனர். இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் கொழும்புக்குச் சென்ற தபால் புகையிரதம் (தாக்கப்பட்ட புகையிரதம்) அனுரதபுரத்திற்குச் சென்று செய்தி பரப்பும் வரை அனுரதபுரத்தில் நின்ற பிரயாணிகளுக்கு எவ்வித பிரச்சினையும் எழவில்லை என்பதாகும்.

எனவே யாழ்ப்பாணத்தில் இருந்து இனக் கலவரத்திற்கு திரி மூட்டப்பட்டது என்பதும் அதற்கு தமிழர் கூட்டணியினர் பொறுப்பற்ற முறையில் தலைமை தாங்கினர் என்பதும் மறைக்க முடியாத உண்மையாகும். பொலீஸ் அட்டூழியத்திற்கு எதிராகப் போராடுவது நியாயமானதே. ஆனால் சிங்களப் பொலீஸ் கூடாது தமிழ் பொலீஸ் நல்லது என்ற கூட்டணியினரின் கூற்றின் காரணமாகவே பொலீசுக்கு எதிரான ஒரு சம்பவத்தை சிங்களக் கடைகளை உடைக்கும் நிலைமைக்குத் தள்ளியது. இந்த "வீரர்கள்" கடைகளை உடைக்கும் பொழுது வேலைக்கு வந்த தொழிலாளி கூறிய கூற்று என்னவெனில் "பொலீஸ்காரன்கள் அநியாயம் செய்தால் அவங்களோடை சண்டைபிடிக்கிறதுக்கு ஏன் இவங்கள் சிங்களக் கடையை உடைக்கிறாங்கள்" என்பதாகும்.

மேலும் தமிழர் கூட்டணியினர் இவ் இனக்கலவரத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. 17-8-77 வெளிவந்த சுதந்திரன் பத்திரிகையில் "லண்டன் ஒப்சேவர்" எழுதுகிறது என்று கூறி ஒரு நீண்ட செய்தியை பிரசுரித்திருந்தார்கள். அச் செய்தியின் முடிவில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது "எவ்வளவுக்கெவ்வளவு புதிய அரசு கொடுமை புரிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ஒவ்வொரு தமிழ்க் கிராமமும் சிங்களவரினால் தாக்கப்படல் வேண்டும். அப்போது நாங்களும் தயாராகி விடுவோம்." இதிலிருந்து இனக் கலவரம் ஒன்று வருவதை தமிழர் கூட்டணியினர் விரும்பினார்கள் என்பது புலனாகின்றது. இது மட்டுமல்ல ஆகஸ்ட் 13ம் திகதி வெளிவந்த இன்டிப்பென்டன் (Independent) ஆங்கில வார இதழ் (இது தமிழர் கூட்டணி ஆதரவுப் பத்திரிகை) முன் பக்கத்தில் வடக்குக் கிழக்குக்கு வெளியில் உள்ள தமிழர்கள் தத்தமது இடங்களுக்குச் செல்வதற்குப் பெட்டிகளைத் தயார் செய்யும்படி தமிழர் கூட்டணி ஆலோசனை கூறுகிறது எனச் செய்தி வெளியிட்டிருந்தது. இத்தனைக்கும் பின்பு தமிழர் கூட்டணியின் தலைவர்கள் நாக்கூச்சம் இன்றி தமக்கும் கலவரங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறுவது எவ்வளவு அபத்தமானவுள்ளது. தமது அரசியல் விவேகமற்ற கோஷங்களால் ஏற்பட்டிருக்கும் மோசமான விளைவுகளால் இடி விழுந்த நிலையில் கூட்டணித் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்று தமிழ் பேசும் மக்களின் வெறுப்புணர்ச்சிகளில் இருந்து தப்புவதற்கு வேறு கோஷங்கள் தேடி மண்டையைப் போட்டு அடித்த வண்ணம் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்ளும் பரிதாபகரமான நிலைக்கு கூட்டணித் தலைவர்கள் வந்துள்ளனர். ஆனால் சாதாரண தமிழ் மக்கள் இந்த மேடைப் பேச்சு வீரர்களினதும், அறிக்கை விடும் ஐயாமார்களினதும் வண்டவாளங்களைப் புரிந்து கொண்டுள்ளனர்.

எனவே கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணச் சம்பவங்களுக்கும் அதன் விளைவாக நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்திற்கும் பெரும் பகுதிப் பொறுப்பை தமிழர் கூட்டணியினரே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

## இலங்கை மக்களுக்கு யாழ்ப்பாண வளாக இடதுசாரி முன்னணியின் வேண்டுகோள்

இம்மாதம் (ஆகஸ்ட்) 13ம் திகதி யாழ்ப்பாணப் பொலீசாருக்கும் (சிவில் உடையில் இருந்த பொலீசாருக்கும்) பொது மக்களுக்குமிடையில் ஏற்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் இருந்து ஏற்பட்ட பொலீஸ் நடவடிக்கைகளால் கடைகள் உடைக்கப்பட்டும், தீவைக்கப்பட்டும் சாதாரண மக்கள் அநியாயமாக துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகினர். இவைகளைத் தொடர்ந்து வளாக மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள் என்று

### பொய் வதந்திகள் நாட்டில் பரவி வகுப்புவாதக் குழப்பங்கள்

நடைபெறுகின்றன. இதனால் பொது மக்கள் ஏமாற்றப்பட்டு, இதைப் பாவிக்கும் கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து சாதாரண மக்களைக் கொல்லவும், மக்களின் உடைமைகளைக் கொள்ளையடிக்கவும் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாண வளாகத்தில் 400க்கு மேலான சிங்கள ஆண் பெண் மாணவர்கள் எல்லோரும் விசேஷ பஸ் வண்டிகளில் இராணுவ உதவியுடன் தத்தம் ஊர்களுக்கு வந்துவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இருக்கும் வரை சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களாலும், அயலவர்களாலும் பாதுகாப்பளிக்கப்பட்டனர். அவர்கள் ஒருவருக்காவது பொய் வதந்திகளில் கூறப்படுவது போல் ஒருவிதமான ஆபத்தும் இருக்கவில்லை.

அரசாங்கம் வகுப்புவாதக் கலவரத்தை அடக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சாதாரண மக்கள் பொய் வதந்திகளால் ஏமாறவேண்டாமென்றும் எங்கள் முன்னணி கேட்டுக் கொள்கின்றது. மேலும் மற்றைய மாணவர் சங்கங்களையும், தொழிற் சங்கங்களையும் மற்றும் பொது ஸ்தாபனங்களையும் நிலைமை கட்டுமீறிப் போகாத வகையில் உடனடி நடவடிக்கை எடுக்கும் படி நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

**இடதுசாரி மாணவ முன்னணி**
**யாழ்ப்பாண வளாகம்**

(இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாக இடதுசாரி மாணவ முன்னணியின் சார்பில் சி. த. றெஜைசறே அவர்களினால் கொழும்பு-2 மலே வீதி, இல. 50, இராஜமணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.)

குறிப்பு:-

கடந்த ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நாடு முழுவதிற்கும் இனக்கலவரம் பரவிய போது யாழ் வளாகத்தில் இருந்து தென் பகுதிக்குத் திரும்பிய யாழ்-வளாக மாணவர்கள் இனக் கலவரத்தை தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு மேற்கண்ட துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டனர்.

# எதிரி யார்? நண்பன் யார்?

தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கியுள்ள இனப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் எதிரி யார்? நண்பர்கள் யார்? என்பதை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மிகத் தெளிவாக முன் வைத்து வந்துள்ளது. சிங்கள ஆளும் வர்க்கமும் அவர்களைப் பாதுகாக்கும் அரசு யந்திரமும் அதன் பிரதான அம்சமான ஆயுதப் படைகளும் தான் தமிழ மக்களின் எதிரிகளே தவிர பெரும்பான்மையான சாதாரண சிங்கள மக்கள் தமிழ் மக்களின் எதிரிகள் அல்லர்: அவர்கள் நண்பர்கள் என்றும் எடுத்துக் காட்டி வந்துள்ளோம். மிகச் சிறுபான்மையான ஆனால் ஆட்சி அதிகாரமும். ஆயுத சக்திகளுமாக உள்ள சிங்கள ஆளும் வர்க்கத்தின் இன அடக்குமுறைகளை எதிர்க்கப் பெரும்பான்மை சிங்களமக்களுடன் குறிப்பாகப் புரட்சிகர சக்திகளான தொழிலாளி-விவசாயி-புத்திஜீவிகளுடன் இணைந்து உரிமைகளுக்கான இயக்கத்தை நடத்த வேண்டும் என்றும் நாம் கொள்கை முன் வைத்து வந்துள்ளோம். தமிழ் இனத்தின் நியாயமான உரிமைகளுக்கான எந்த இயக்கத்தையும் ஆதரிக்கும் பெரும்பான்மையான சிங்கள மக்களை நண்பர்களாக்கும் கொள்கையை முன்வைப்பதற்குப் பதிலாக முழுச் சிங்கள மக்களையும் தமிழர்களுக்கு எதிரான விரோதிகளாக்கும் கொள்கையையே தமிழத் தலைவர்களும் தமிழர் கூட்டணியும் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

தமிழர் கூட்டணியினர் சாதாரண சிங்கள மக்களுக்கும் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கும் இடையில வித்தியாசத்தை கண்டு கொள்ள மறுக்கின்றனர். இன அடக்கு முறையில் ஈடுபடும் சிங்கள ஆளும் வர்க்கத்தைப் பாதுகாக்கும் ஆயுதப் படைகளின் இயல்பைப் பற்றி உண்மைகளைப் புரிந்து கொள்ள மறுக்கின்றனர். இதே ஆயுதப் படைகள் தான் சிங்கள மக்களையும் அடக்கும் சக்தி என்பதையும் உணர்ந்து கொள்ள மறுத்ததுடன் ஆயுதப்படைகளில் சிங்களவர்கள் கூடாது தமிழர்கள் நல்லவர்கள் என்றும் கூறினர். இவர்களது கூற்றுப்படி பார்த்தால் துவக்குகளிலும் சிங்களத்துவக்கு தமிழ்த் துவக்கு என இருக்கிறதா? என்ற கேள்வி எழும். தமிழ் பேசும் மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு இனவெறி ஊட்டினார்களே தவிர உண்மையான எதிரி யார் என்றோ அல்லது அதற்கு எதிராக எவ்வாறு போராடுவது என்றோ தமிழர் கூட்டணியினர் கொள்கை முன் வைக்கவில்லை. அதனால் தான் ஆயுதப் படைகள் மக்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளை எடு[illegible]முழு தமிழர் கூட்டணியினர் திக் பிரமை பிடித்து செய்வதறியாது திகைத்ததை மக்கள் உணராமல் இல்லை. சாதாரண பேக்கரிகளையும், சிங்களக் கடைகளையும் மூர்க்கமாக உடைக்கும் போது இருந்த உஷார் ஆயுதப்படைகள் அரங்கத்திற்கு வந்ததும் எங்கே சென்றுவிட்டது? இப்பொழுதாவது சாதாரண பேக்கரி வைத்திருக்கும் சிங்களவன் எதிரியா? அல்லது ஆளும் வர்க்கமும் அவர்களைப் பாதுகாக்கும் ஆயுதப்படைகளும் எதிரியா? என்பதைத் தமிழர் கூட்டணியின் கொள்கை வகுப்போர் புரிந்து கொள்வார்களா?

இங்கேதான் ஒரு கட்சியின் சரியான அல்லது தவறான கொள்கைக்கு சோதனை ஏற்படுகிறது. சரியான கொள்கையானால் விஷயங்கள் வெற்றியை நோக்கி முன்னேறும். தவறான கொள்கையானால் அதனால் மக்கள் மோசமான விளைவுகளை அனுபவிக்க நேரிடும். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கொள்கை வெறும் உணர்வுகளால் வெளிப்படும் உணர்ச்சி வசப்பட்ட அடிப்படையில் உருவாக்கப்படக் கூடாது. நமது நாட்டின் பூகோள - சரித்திர - பொருளாதார நிலைமைகளின் அடிப்படையிலான உண்மைகளின் வளர்ச்சிப் போக்கில் இருந்தே [illegible] மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு கொள்கை முனவைக்கப்படல் வேண்டும். அக் கொள்கையின் முக்கிய பிரச்சினையே எதிரி யார்? நண்பன் யார் என்ற விஷயமாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இவ் விஷயத்தில் ஏற்கனவே தெளிவான முடிவுகளை முன் வைத்துள்ளது. அந்தக் கொள்கையின் உண்மைத் தன்மை பற்றி தமிழ் பேசும் மக்கள்-இளைஞர்கள் சிந்திக்க வேண்டும் என விரும்புகின்றோம்.

**சரியான அல்லது தவறான கொள்கையில் இருந்தே சகலதும் தீர்மானிக்கப்படுகின்றன!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக் கலவரங்களும் அதன் ஆபத்தும்

ஒரு நாட்டில் இனக்கலவரங்களை மூட்டிவிடுவோர் சம்பந்தப்பட்ட இனங்களின் மத்தியில் உள்ள இனவெறி சக்திகளாகும். இவ் இனவெறி சக்திகளுக்கு அரசியல் ரீதியில் இனவெறி ஊட்டி வளர்ப்பவர்கள் சம்பந்தப்பட்ட இனங்களின் மத்தியில் உள்ள முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளாவர். இத்தகையவர்களால் உருவாக்கப்படும் இனக்கலவரம் எந்த ஒரு நாட்டிலும் கற்பனை செய்ய முடியாத கொடூரத் தன்மை வாய்ந்ததாகவே இருக்கும். அதே போல் மனிதன் அவன் எந்த இனத்தைச்சேர்ந்தவனாக இருந்தாலும் சரி இனவெறியால் உந்தப்பட்டால் மிகக் கீழ்த்தரமான நடவடிக்கை எல்லாவற்றிலும் ஈடுபடுவதைக் காண முடியும். இத்தகைய இனக் கலவரங்களில் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருக்கும் கொள்ளையர்கள், கொலையாளிகள் போன்றோரும் சேர்ந்து நிலைமையை தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதையும் காண முடியும்.

நமது நாட்டில் இரண்டாவது தடவையாக தமிழ் சிங்கள இனக்கலவரம் மோசமானமுறையில் நடந்துள்ளது. ஒரு இனக்கலவரத்தை தடுப்பதற்குரிய ஒரே வழி சிறுபான்மை இனங்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதும், வழங்குவதுமேயாகும். ஆனல் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை நசுக்கி இன அடக்குமுறையைச் செய்வதிலும் முதலாளித்துவ சமூக அமைப்பு எப்பொழுதும் முன்னின்று வருவதைக் காண முடியும். எனவே இனங்களின் மத்தியிலான பிணக்குகளையும், ஒரு பெரும் இனம் சிறுபான்மை இனத்தை அடக்கும் நிலையை இல்லாமல் செய்வதற்குரிய ஒரே மார்க்கம் இனங்களின் மத்தியில் உள்ள தொழிலாளி வர்க்கமும் ஏனைய உழைக்கும் வர்க்கங்களும் தத்தம் இனங்களின் மத்தியில் உள்ள முதலாளித்துவ அரசியல் கட்சிகளை நிராகரித்து உழைக்கும் வர்க்கம் என்ற ரீதியில் ஐக்கியப்பட்டு தமது வர்க்க எதிராளிகளுக்கு எதிராகப் போராடுவதேயாகும். பல்வேறு இனங்கள் வாழும் ஒரு நாட்டில் இனங்கள் மத்தியில் உள்ள தொழிலாளி வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் ஐக்கியத்தைக் குலைப்பதிலும், அவர்களது வர்க்க ரீதியான ஒற்றுமை வளர்ச்சியை தடுப்பதிலும் முதலாளித்துவ அரசியல் வாதிகள் கண்ணும் கருத்துமாகவே இருந்து வருகின்றனர். இந்நிலையை முறியடிக்க சகல இன மக்கள் மத்தியிலுமுள்ள புரட்சிகர சக்திகள் நாளாந்த பாட்டாளி வர்க்க அரசியல் வேலையை எல்லா இனங்களின் மத்தியிலும் வேகமாக்ச் செய்தல் வேண்டும். இரு இனங்களின் மத்தியில் வர்க்க ரீதியிலான புரட்சிகர அரசியல் வலுப்பெற்றிருக்குமானல் மீண்டும் ஒரு இனக்கலவரம் நமது நாட்டில் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருந்திருக்க முடியாது. ஏனெனில் முரண்பாட்டிற்கு மூல காரணமாக உள்ள ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் சகல இன உழைப்பாளி மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையே பிரதானமாகக் கொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடும்.

நமது நாட்டில் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்திற்காக வக்காலத்து வாங்கும் இரு இனங்களின் மத்தியிலான அரசியல் வாதிகளும் — கட்சிகளும் நாளாந்தம் இனவெறிக் கோஷங்களுடன் அரசியல்நடாத்தி அதன் மூலம் தமது வாக்குகளின் நலன்களையும் பாதுகாத்து வருகின்றனர். ஆனல் தமது வர்க்கத்தின் நலனுக்காக ஊட்டி வளர்க்கப்படும் இனவெறி ஒரு கட்டத்தில் பெரும் இனக்கலவரமாக மாறி விடுகின்றது. இனவெறியைக் கக்கிய தலைவர்களும் அவர்களது தொண்டர்களும் பாதுகாப்பாக இருப்பார்கள் ஒன்றுமறியாத பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர், உடமை, தொழில், வருவாய் சகலதையும் இழந்து அவல நிலைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இனக்கலவரம் ஏற்படுவதற்கு முன் அதன் ஆபத்தைப் பற்றி எடுத்துக் கூறி இனவெறி அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று இரு இனங்கள் மத்தியிலும் புரட்சிகர கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்யும்போது இன உணர்வுகளால் உந்தப்பட்டவர்களுக்கு புரட்சிகர சக்திகள் கேலிக்குரியவர்களாகவே காட்சி கொடுப்பர். ஆனல் புரட்சிகர சக்திகளால் முன் எச்சரிக்கை செய்யப்படும் இனக்கலவரம் வெடித்து இனவெறி நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் போது "என்றாலும் இந்த இனத்தவர்கள் இவ்வாறு செய்திருக்கக் கூடாது" "அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் மனிதத் தன்மையோடு நடந்திருக்க வேண்டும்" "ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்" "அவர்களது இனத்துக்குரிய குணம்", "என்றாலும் நமது இனம் பண்பாடானது" என்ற வசனங்களையும், முணுமுணுப்புகளையும் கேட்க முடிகிறது. ஒரு இனக்கலவரம் காரணம் இன்றி வருவதில்லை. கலவரம் ஆரம்பமாவதற்கு முன் ஒரு இனக்கலவரத்தை நோக்கி நிலைமைகள் இழுத்துச் செல்லப்படும் பொழுது அந்த இனவெறி அரசியலுக்கு ஆதரவு கொடுத்து உற்சாகமளித்து தத்தமது இனப்பெருமைகளைப் பற்றி பீற்றிக் கொண்டவர்கள், அதன் விளைவுகளை ஒரு கணம் தானும் சிந்தித்துப் பார்க்க முடியாதவர்கள், அல்லது இனக்கலவரம் என்ற பயங்கர வெடிக்கு திரியில் தீ வைக்கும் போது கூட வெடியின் கோரத்தனம் எவ்வாறு இருக்கும் என்பதை முன் கூட்டியே புரிந்து கொள்ள முடியாத முட்டாள்தனமான அரசியல் கொள்கைகளைக் கொண்டவர்கள், இனக் கலவரம் ஆரம்பமான பின் சுடலைஞானம் பேசுவது அறிவீனமும், முட்டாள்தனமானதுமாகும்.

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரத்தில் இரு இனங்கள் மத்தியிலும் இருந்து பங்கு கொண்டவர்கள் சிறுபகுதியினராகும். ஆனல் பெரும்பான்மையான இரு இன மக்களும் இனக்கலவரத்தை விரும்பவும் இல்லை. அதில் ஈடுபட்டதும் கிடையாது. வடபகுதியில் இருந்து அகதிளாக தெற்கு நோக்கிச் சென்ற சிங்கள மக்களை பெரும்பான்மையான தமிழ் மக்கள் பாதுகாத்து அனுப்பினர்கள் அதே போல் வடக்கு நோக்கி தென் பகுதியில் இருந்து வந்த தமிழ் மக்களை பெரும்பான்மையான சிங்கள மக்கள் பாதுகாத்து ஆதரவளித்து அனுப்பினர். இந்த உண்மைகளை இனவாதிகள் மறைக்க முயன்றாலும் அகதிகளாகச் சென்ற சாதாரண தமிழ் சிங்கள மக்கள் முன் மறைக்க முடியாது. இதில் இருந்து தெரிவது என்னவெனில் நமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இனக்கலவரத்தையோ அல்லது இனவெறியர்களின் நடவடிக்கைகளையோ விரும்பவில்லை என்பதாகும்.

எனவே மீண்டும் ஒரு இனக் கலவரம் நமது நாட்டில் நடைபெறுவதைத் தடுக்க ஒரே ஒரு வழி இனவாத அரசியலில் இருந்து விடுபட்டு வர்க்க ரீதியிலான புரட்சிகர பாட்டாளி வர்க்க அரசியலின் பக்கம் இரு இனங்களின் மத்தியிலான பெரும்பான்மையான தொழிலாளி வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் ஒன்று திரள்வது தான் சரியான மார்க்கமாகும். இதை விடுத்து "சட்டியில் இருந்து நெருப்புக்குள் வீழ்வது" என்ற அடிப்படையில் மீண்டும் இனவாத அரசியலை முன்னெடுத்தால் மீண்டும் மீண்டும் இனக்கலவரங்கள் நடைபெறத்தான் செய்யும். இன்று ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையிலாவது கடந்த கால இனவாத அரசியல் கட்சிகளினல் முன்வைக்கப்பட்ட வெற்றுக் கோஷங்களையும், விளல்தனமான 'வீரவசனங்களையும்', இன உணர்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்த்து சரியான முடிவுகளுக்கு வரவேண்டியது தமிழ் பேசும் மக்களின் தலையாய கடமையாகும். அதே வேளை தாம் ஆளும் இனம் என்ற அகங்காரப் போக்கில் தமிழ் இனத்தின் மீது இன அடக்குமுறைகளைச் செய்வதற்கு சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு பெரும்பான்மையான சாதாரண சிங்கள மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவதுடன் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்.

## வங்குரோத்துப் பாதையினல்...

— நந்தினி சேவியர்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

இதற்கு முன்பும் இப்போதும்
இலங்கையினை ஆளுகின்ற
வகுப்புவாத அரசாங்க
வங்குரோத்துப் பாதையினல்
இருக்கின்ற பிரச்சினைகள்
இன்னும், இன்னும் கூடியதால்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

வார்த்தைகளை நம்பி
வெளவாலை எதிர்பார்த்து
சேர்ந்திருந்த ஐக்கியத்தை
சிதைப்பதற்கு முனைந்து நின்ற
கூட்டணியின் தலைமையின் பின்
கூறுபோட நின்றதனல்.........

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துள்ளது

வடக்கினிலும் கிழக்கினிலும்
வாழுகின்ற மக்களினை
பிரித்தெடுக்க நின்று
பேய்க்கதைகள் பேசியதால்
முழு இலங்கை ஐக்கியத்தை
முடித்து வைக்கும் நோக்கமுடன்
வகுப்புவாதப் பெருநெருப்பை
வடகிழக்கில் மூட்டியதால்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

தேர்தலுக்கு முன்பு சிலர்
திட்டித் கிட்டி மேடைகளில்
போர்க் கொடிகள் ஏந்திப்
புதுக்குரல்கள் பேசியதும்
ஆர்த்தெழுக அடிபிடிக்கு
அதன் பிறகு தனிநாடு
நேரடியாய் கிடைத்துவிடும்
நிமிர்ந்தெழுக என்றதனல்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

இனத்துக்காய் அரசியலை
இப்போதும் பேசுகிற
இழிதுணத்துத் தலைவர்களால்
ஏமாந்து போனதனல்
உழைக்கின்ற வர்க்கத்தின்
உறுதியினைக் குலைக்க வைத்து
தழைத்தோங்கி வந்தநல்ல
தேசியத்து ஐக்கித்தை
சிதைப்பதற்காய் கைகோர்த்த
தேசத்துத் தலைவர்களால்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

அகதிகளாய் பற்பலபேர்
அலலலுற்று மாளுகையில்
அவர்களினை காப்பாற்றும்
ஐக்கியங்கள் இருக்கையிலே
சனத்திடையே பொலீசார்
சண்டித்தனம் காட்டியதால்

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

ஐம்பத்து எட்டு ஒன்று
அடுத்து இங்கு நிகழ்ந்துளது

## ரொட்ஸ்கியவாதிகள் மாக்சிசத் துரோகிகள்

மாக்சிசத்தை திரித்துக் கூறுவதே சகல சந்தர்ப்பவாதிகளினதும் தொழிலாக இருந்து வருகின்றது.

லெனினிசம் "பழையது". "பிரயோசனமற்றது" எனக் கூறிய ரொட்க்ஸ்கி "லெனினிசத்தின் முழுச் சாராம்சமுமே தற்போது பொய்களாலும், புரட்டுக்களாலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது" எனவும் தெரிவித்தான்.

"நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை" அடிப்படையாகக் கொண்ட ரொட்ஸ்கியவாதம் தனியாக ஒரு நாட்டிற் கூட சோஷலிசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற லெனின் கோட்பாட்டை எதிர்த்தது; சமகாலத்தில் பிரதான ஐரோப்பிய நாடுகளில் வெற்றி பெறுவதன் மூலமே சோஷலிச வெற்றி சாத்தியமெனக் கூறியது. உலகப் புரட்சியின் உடனடி வெற்றிக்குத் தாம் உழைப்பது போல் பாசாங்கு செய்து மக்களை நம்பவைக்க முயற்சித்த அதே வேளை ரொட்ஸ்கிய வாதிகள் பொதுவில் பாட்டாளி வர்க்க புரட்சிக்கும் குறிப்பாக ரஷ்யப் புரட்சிக்கும் குழிபறித்தனர்.

லெனின் மரணத்திற்கு சொற்பகாலம் முன்பும், பின்பும் ரொட்ஸ்கிய வாதிகளின் கட்சி விரோத நடவடிக்கைகள் ஏராளம் இடம்பெற்றன. இந்தச் சமயத்தில் தான் சோவியத் யூனியனில் பொருளாதார புனரமைப்பு வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. சகலதும் மிகச் சிறப்பாக இல்லாவிட்டாலும் கைத்தொழிலிலும், விவசாயத்திலும் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெறப்பட்டு தொழிலாளர், விவசாயிகளின் வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்பட்டது. ஆனல் ரொட்ஸ்கிய வாதிகளோ நாட்டிற்கு ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி வரவிருப்பதாகவும் சோவியத் அரசு வீழ்ச்சியடையுமெனவும் ஆருடம் கூறி கட்சி விரோதப் பிரகடனமொன்றை வெளியிட்டனர். கைத்தொழில், விவசாய உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு முன்னேற்றம் செய்யலால் என்பது பற்றியோ அவர்கள் எந்தவித ஆலோசனைகளையும் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் கைத்தொழில் பொருள்களுக்கு கூடிய விலைகளையும், விவசாயிகள் மீது அதிகரித்த வரியையும் அறவிட வேண்டுமெனக் கூறினர்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தொழிலாள-விவசாய உறவுகளைச் சீர்குலைக்க எண்ணினர். ஒரு நல்ல அறுவடை "நகரத்திற்கும், கிராமத்திற்குமிடையான பரஸ்பர உறவை மோசமடையச் செய்து பொருளாதாரத்தை சீர்குலைக்கக் கூடும்" என்று பித்தலாட்டக் கதையை ரொட்ஸ்கி பரப்பினன். அப்போது அவர்கள் லெனின் சுகவீனம் காரணமாகச் செயற்பட முடியாதிருந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து தமது குழு நடவடிக்கைகளைச் செய்யும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தனர்.

எப்பொழுதும் கட்சிக்கு எதிர் அணி திரட்டுவதில் பரிச்சயமுள்ள ரொட்ஸ்கி தன்னை கட்சியின் மத்திய குழுவிற்கு மேலாகவே வைத்து வந்தான். "ரொட்ஸ்கி வாயளவில் மட்டுமே கட்சிக்கு சேவை செய்கிறன். ஆனல் ஏனைய குழு நடவடிக்கைக்காரர்களிலும் மோசமான வகையில் குழு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறன்" என லெனின் (ஜீ.வை.ஸினேவியேவ்விற்கு எழுதிய போது) குறிப்பிட்டிருந்தார். ரொட்ஸ்கிய வாதிகள் வெளிப்படையாகவே கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தினர். கட்சி இயந்திரத்தைப் பாதிக்கும் முயற்சியாக தமது சொந்த மத்திய ஸ்தல உறுப்புக்களை உருவாக்கி இரகசியமாக இயங்கினர். அப்போது ரஷ்யாவின் பெரிய நகரமான பீட்டோ கிராட்டை மையமாகக் கொண்டு தமது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது பெயர்களுடன் கட்சி விரோத ஆவணங்களை வெளியிட்டு வந்தனர்.

மாக்சிசம் ஒன்றன் பின் ஒன்ருக வெற்றி பெற்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் ஸ்திரமடையவே திரிபுவாதத்தை நடைமுறைப் படுத்திய, பிளவுகளை ஏற்படுத்திய ரொட்ஸ்கிய வாதிகள் சூழ்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கினர்.

நேரடியாகவே லெனினைத் திட்டி வந்த ரொட்ஸ்கியவாதிகள் ஒக்டோபர் புரட்சியின் பின் அவரை "மாபெரும் அறிஞர்" எனக் கூறிக் கொண்டு இரகசியமாக அவரைக் கொல்வதற்கு வெண்காவலர்களுடன் கூடிக் குலாவினர். லெனினுடைய இறுதிப் பணிப்புரைகளை போல்ஷவிக் கட்சியின் மத்திய குழு "மறைத்துவிட்டது" என்ற வதந்தியைப் பரப்பினர். போல்ஷ்விக் கட்சி மத்திய குழுவின் பெரும்பான்மையினர் ஒக்டோபர் எழுச்சியை எதிர்த்தனர் என்ற பொய்யைப் பரப்பிய ரொட்ஸ்கிய வாதிகள் "ஒக்டோபர் எழுச்சியின் ஏகத் தலைவன்" ரொட்ஸ்கியேயென்றும் அவன் ஒரு "தலை சிறந்த" தத்துவ ஞானி யென்றனர்.

இவர்களுடைய இரட்டை வேடங்கள் யாவும் 1937ம் ஆண்டு சோவியத் நீதிமன்றத்தில் பகிரங்க விசாரணையின் போது அம்பலமானது. ரொட்ஸ்கியவாதிகள் ஒரு எதிர்ப் புரட்சிக் கும்பல் என்பதும் உள்நாட்டில் வெண்காவலருடன் நீண்டகாலமாக கூடிக் குலாவினர் என்பதும் அந்நிய இரகசிய பொலீஸ் நிறுவனங்களின் சேவகர்கள் என்பதும் நிரூபிக்கப்பட்டது.

**இன அடக்கு முறையை எதிர்க்க சரியான கொள்கையின் கீழ் ஐக்கியப்படுவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது சோவியத்தின் கழுகுக் கண்கள்!

# சோவியத் உளவாளிகள் வெளியேற்றப்பட்டனர்!!

எமது நாட்டு புரட்சிகர, தேசபக்த சக்திகளின் சார்பாக நாம் பல தடவை சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் இலங்கை மீதான கழுகுப் பார்வையைப் பற்றி முன்னெச்சரிக்கை செய்து வந்துள்ளோம். இந்திய விஸ்தரிப்பு வாதிகளின் உதவியோடும், நமது நாட்டு நவீன திரிபுவாதக் கூட்டத்தின் காட்டிக் கொடுப்போடும் சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகள் இலங்கை மீது பல்வேறு வித மேலாதிக்கத்தைச் செலுத்த முற்படுகிறார்கள் என்பது இன்று வெட்ட வெளிச்சமாகி வருகின்றது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இரண்டு சோவியத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளை இருபத்திநாலு மணித்தியாலங்களுக்கிடையில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு இலங்கை அரசாங்கம் உத்தரவிட்டது: அந்த உத்தரவுபின்பு அரசாங்கத்தால் வாபஸ் வாங்கப்பட்டு ஒரு வாரம் பிற்போடப்பட்டது. ஆனல் சம்பந்தப்பட்ட இரண்டு ''தொழிற் சங்கப் பிரதிநிதிகளும்'' சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் உளவாளிகள் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களில் ஒருவர் ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் செய்து வளமையான ராஜதந்திர மட்டத்துக்கு அப்பால் நாட்டின் பல்வேறு விதமான வர்களைச் சந்தித்து உரையாடியவர் என்று குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக நமது நாட்டைப் பிரிப்பதற்கு முயற்சிக்கும் சக்திகளோடும் சோவியத் மேலாதிக்கத்திற்கு நமது நாட்டில் குடை விரிக்கும் நவீன திரிபுவாதக் கும்பலுடனும் இந்த நபருக்கு தொடர்புகள் இருந்ததாக நம்பப்படுகின்றது. அதுமட்டுமன்றி இவர் சோவியத் உளவு ஸ்தாபனமான கே. ஜீ. பி.யின் பெயர் பெற்ற உளவாளியுமாவார்.

இவ்வாறு தொழிற் சங்கப் பிரதிநிதிகள் என்னும் போர்வையில் மேற்படி சோவியத் உளவாளிகள் பிடிபட்டது போல் உலகின் பல்வேறு நாடுகளிலும் சோவியத் உளவாளிகள் பிடிபட்டுப், துரத்தப்பட்டும் வருகின்றனர். சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தனது உலக மேலாதிக்க நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளும் வகையில் தனது உளவு ஸ்தாபனமான கே. ஜீ. பி. மூலம் உளவாளிகளை உலகம் முழுவதிலும் உலாவ விட்டுள்ளது. உலக மக்களையும் நாடுகளையும் தத்தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு மேலாதிக்க வல்லரசுகளான அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் உலகில் உளவு வேலைகளைப் பார்ப்பது முதல் விண்வெளிக்குச் செல்வது வரை சகலவற்றிலும் போட்டி போட்டு வருகின்றன.

இந்த சோவியத் உளவாளிகள் பிடிபட்டது பற்றி இலங்கையில் உள்ள சோவியத் தூதரகம் கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள் வெறும் ''தொழிற் சங்கப் பிரதிநிதிகள்'' மட்டுமே என்று கூறி விஷயத்தை மூடி மறைக்கப் பார்க்கின்றது. அதே வேளை சோவியத் யூனியன் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் ஒரு போதும் தலையிடுவது இல்லை என்றும் கூறியுள்ளது. சோவியத் சமூக ஏகாதிபத்தியம் இன்று பல்வேறு நாடுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருவதை உலக மக்கள் முன் மறைக்க முடியாது. செக்கோஷிலவாக்கியாவில் அப்பட்டமான ஆக்கிரமிப்பும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளை தனது ராணுவ-பொருளாதார பிடிக்குள்ளும் வைத்து ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆபிரிக்காவை ஆதிக்கம் செலுத்த முற்பட்டு அங்கோலாவில நேரடியாகத் தலையிட்டு ஆக்கிரமிப்புச் செய்ததுடன் செய்ரே நாட்டிற்குள்ளும் தனது கூலிப் பட்டாளங்களின் மூலம் ஆக்கிரமிப்புச் செய்தது. அரபு நாடுகள் மத்தியில் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கவும், கட்டுப்படுத்தவும் நாளாந்தம் கீழ்த்தர வேலைகளை சோவியத் சமூக ஏகாதிபத்தியம் செய்து வருகின்றது. பலஸ்தீன மக்களின் நீதியான போராட்டங்களைத் திசை திருப்பவும், மழுங்கடிக்கவும் முயற்சி செய்து வருகின்றது. அதே போல் இந்திரா காந்தியின் தலைமையிலான பழைய இந்திய அரசுடன் சேர்ந்து விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்து வந்ததையும் இலங்கை மக்கள் மறக்கவில்லை. அண்மையில் கூட சூடான் நாட்டு அரசாங்கத்தை கவிழ்க்க இந்த சோவியத் சமூக ஏகாதிபத்தியம் முற்பட்டு சூடானிய மக்களாலும் அரசாலும் அம் முயற்சி தோற்கடிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. இவை அத்தனையும் ''அந்நிய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை'' என்ற முக மூடியுடன் தான் சோவியத் ஏகாதிபத்தியவாதிகள் செய்துவந்தனர்.

அதே போல் நமது நாட்டிலும் தமது கைவரிசையைக் காட்டி தமது மேலாதிக்க நோக்கத்தை ஈடேற்ற நமது நாட்டு தேச விரோத-பிரிவினை சக்திகளோடு கூடிக் குலாவ முற்பட்டதனலேயே இவ்விரு உளவாளிகளும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தர விடப்பட்டனர் எனக்கூறப்படுகின்றது. தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபடும் நமது நாட்டு சக்திகளுக்கு எதிராகவும், அதன் மூலம் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் கழுகுக் கண் கொண்டு நமது நாட்டைப் பார்க்கும் தீய நோக்கத்திற்கு எதிராகவும் சகல தேசபக்த சக்திகளும், புரட்சிகர சக்திகளும், முற்போக்கு வாதிகளும் மிகவும் விழிப்புடன் இருந்து நமது நாட்டையும், மக்களையும் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்பதையே மேற்படி சம்பவம் முன்னெச்சரிக்கை செய்கின்றது.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 11 வது மாநாடு

கடந்த ஆகஸ்ட் மாதம் 12 ம் திகதியில் இருந்து 18 ம் திகதி வரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 11-வது மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. கட்சியின் அரசியல் அறிக்கையை தோழர் குவா ஹோ பெங் அவர்களும், கட்சியின் சட்ட திட்ட திருத்தத்தை தோழர் யீ சென்-யிங் அவர்களும் சமர்ப்பித்தனர். மாநாடு அரசியல் அறிக்கையையும், சட்ட திட்ட திருத்தத்தையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதுடன் புதிய மத்திய கமிட்டியையும் தெரிவு செய்தது. மாநாட்டிற்குப் பின் நடைபெற்ற புதிய மத்திய கமிட்டியின் முதலாவது கூட்டத்தில் தோழர் குவா ஹோ பெங் அவர்கள் மீண்டும் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் 11-வது மாநாடும் தோழர் குவா ஹோ பெங் அவர்களைத் தலைவராகக் கொண்ட புதிய மத்திய கமிட்டியும் மாக்சிசம்-லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை என்ற உயர்ந்த பதாகையின் கீழ் மேலும் பல வெற்றிகளைப் பெறவேண்டுமென வாழ்த்துகின்ருேம்.

## இனக்கலவரத்தின் ஆரம்பம்......

1-ம் பக்கத் தொடர்ச்சி

முழுவதிலும் நடைபெற்ற இனக்கலவரத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஒரு பிரிவினர் மிகவும் மூர்க்கத்தனமாக நடந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இது ஏன் என்பது ஆராயப்படவேண்டியதே. இதில் முக்கிய அம்சம் தான் தமிழர் கூட்டணியின் கடைக்கோடி அரசியல் கொள்கையாகும். நமது நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற தமிழர் கூட்டணியினரின் முன் யோசனையற்ற, நமது நாட்டின் பூகோள சரித்திர நிலைமைகளுக்கு முற்றிலும் பொருந்தாத ஒரு மலட்டுத் தனமான கொள்கையால் ஒவ்வொரு தேசப் பற்றுள்ள சிங்களவரும் அச்சுறுத்தப்பட்டுள்ள விடயத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். நாட்டைப் பிரிப்பதற்கு ''அந்நிய உதவி'' விரைவில் வர உள்ளது என்றும், ஏப்பத்தைந்து லட்சம் தமிழர்களுக்கு மட்டுமன்றி, ''உலகத் தமிழர்களுக்கே ஒரு நாடு'', அவசியம் என்றும் கூட்டணித் தலைவர்கள் பேசிய பேச்சுகள் சிங்கள மக்களின் உணர்வுகளை எவ்வாறு பாதித்திருக்கும் என்பதை தமிழர் கூட்டணியின் தலைவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது மட்டுமன்றி கடந்த தேர்தல் மேடைகளில் தமிழர்கூட்டணியினரின் பேச்சுக்கள் எவ்வளவு தூரம் சிங்கள மக்களைப் புண்படுத்தி ஆத்திரப்படுத்தி இருக்கும் என்பதை இவர்களால் உணரமுடியவில்லை. சிங்கள இனத்தின் மொழி, பழக்க வழக்கங்கள், உணவு வகைகளைக் கூட மிகக் கேவலமான முறையில் வர்ணித்துப்பேசி தேர்தலில் புள்ளடி வாங்கியது மட்டுமின்றி நாட்டைப் பிரிப்பதற்கு விரைவில வெளியால் (அந்நிய வல்லரசு) வரப்போகிறது என்று முழங்கிய ''தமிழ் வீரர்களின்'' பேச்சுகள் எல்லாம் இந்தச் சிறிய நாட்டின் அடுத்த பகுதிக்கு எட்டாது என்று எந்த முட்டாள் தான நம்புவான். தங்களது கொள்கைகளுக்கும் பேச்சுகளுக்கும் பின் விளைவுகள் எப்படி இருக்கப் போகிறது என்பதையோ அல்லது அவ் விளைவுகளை வடக்குக் கிழக்குக்கு வெளியிலுள்ள தமிழ் மக்களை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பதையோ சிறிதளவேனும் முன் யோசனையுடன் கணக்கிட்டுக் கொள்ள முடியாத தமிழ்த் தலைவர்களால் ஒருபோதும் தமிழினம் விமோசனம் பெறப்போவதில்லை. வெறும் உணர்ச்சிகளும் உணர்ச்சிநிலையில் பேசும் பேச்சுகளும் அவற்றில் அடிப்படையில் உருவாக்கப்படும் அர்த்தமற்ற கொள்கைகளும் ஒரு இனத்தின் விமோசனத்திற்கான பாதை அல்ல என்பதை இவ்வேளை சுட்டிக் காட்ட விரும்புகின்ருேம்.

தமிழர்கள் மத்தியில் இனவெறி கக்கும் சக்திகள் இருப்பதைப் போல் சிங்கள மக்கள் மத்தியிலும் இனவெறி கக்கும் சக்திகள் இருந்து வருகின்றன. பௌத்த காங்கிரஸ் போன்ற ஸ்தாபனங்களும், சில மத பீடத் தலைவர்களும் தமது இனவெறிக் கூச்சல்களைத் தமிழர்களுக்கு எதிராக கிளப்பிய வண்ணமே இருக்கின்றனர். அண்மையில் தேசிய அரசுப் பேரவையில் பேசிய அகலவத்தை உறுப்பினர் துட்டகைமுனு ஒவ்வொரு சிங்கள இளைஞரின் நினைவிலும் இருக்கிருன் என்று பேசிய பேச்சும், தேர்தலுக்கு முன் முன்னுள் காணி அமைச்சரான கொப்பேகடுவ தொண்டமானை கப்பல் ஏற்றுவோம் என்று கூறிய கூற்றுக்கள் ஒவ்வொன்றினாலும் சிங்கள இளைஞர்களில் ஒரு பகுதியினர் வெறி கொள்ளாமல் இருந்திருக்க முடியாது. அதே போல் இச் சிங்கள இனவெறிப் பேச்சுக்கள் சாதாரண தமிழ் மக்களைக்கூட ஆத்திரப் படுத்தியிருந்தன.

வடக்கிலும் தெற்கிலும் பேசப்படும் இனவாதப் பேச்சுகளும் நடவடிக்கைகளும் இரு இனங்களையும் சேர்ந்த சாதாரண மக்களை மோதவிட்டு பலி கொள்வதில் முடிந்துள்ளதை காணக்கூடியதாக இருந்தது. முதலாளித்துவ அமைப்பின் நீடிப்புக்கும் அதன் சுரண்டல் முறையின் கோரத்தன்மையையும் இரு இன உழைப்பாளி மக்களின் கண்களிலிருந்து திசை திருப்பவும் முதலாளித்துவ சக்திகள் இன மோதலை பாவித்து வருகின்றன. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற முகமூடியின் கீழ் நடைபெறும் சுரண்டல் அமைப்புக்கு முடிவு கட்டாதவரை அடிப்படையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை இருஇனத்தின் மத்தியிலுள்ள உழைப்பாளி மக்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். தமது பிரதான வர்க்க எதிரிகளுக்கு எதிராகப் புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வரமுடியும். இவ் வேளையிலாவது வர்க்க அடிப்படையிலான ஐக்கியத்தையும் வர்க்கப் போராட்டத்தின் அவசியத்தையும் சகல இன உழைக்கும் மக்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

### ஓர் உண்மை

''எதிர்க்கட்சித் தலைவர் பொலீசாரால் தாக்கப்பட்டார்''
— பத்திரிகைச் செய்தி

''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலிருந்தே பிறக்கிறது''

## தொழிலாளி வர்க்கம் இனக்கலவரத்தை தடுக்கவேண்டும்!

### இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் தோழர் சண் அறிக்கை

கடந்த மாதம் இடம் பெற்ற இனக்கலவரத்தின் போது, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக இந்த நாட்டில் துரதிர்ஷ்ட வசமான சம்பவங்கள் பற்றி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற் கமிட்டி ஆராய்ந்தது. யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கும் பொலீசாருக்கும் இடையே நடந்த மோதல், 1958க்குப் பின் இன்னும் ஒரு வகுப்புவாத நாசகாரத்தை அவிழ்த்துவிட இருபக்கத்திலுமுள்ள வகுப்புவாத அரசியல் வாதிகளுக்கு ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. வடபகுதியில் பொலீசார் அட்டூழியம் பல செய்தனர். அதேவேளை தென்பகுதியில் அட்டூழியம் புரிந்தோர்க்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கவும் தவறியுள்ளனர்.

இத்தகைய துக்ககரமான சம்பவங்களின் பின்னணி பற்றி ஆராய சிறிது காலம் செல்ல வேண்டும். எனினும் தேசிய அரசுப் பேரவையில் அங்கத்தவர்களால் நிகழ்த்தப்பட்ட ஆத்திரமூட்டும் பேச்சுகளை நாம் தட்டிக் கழித்துவிடமுடியாது. அகலவத்தையின் பேரவை உறுப்பினர் துட்டகைமுனு இன்னும் இறக்கவில்லை என்று பேசிய பேச்சு மிகவும் வகுப்புவாதம் நிறைந்ததாகும் இதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்ருேம். அத்துடன் பிரதம மந்திரி அவர்களும நாங்கள் சண்டையிட வேண்டுமாஞல் சண்டையிடுவோம். சமாதானமாக வாழ்வோமென்ருல் சமாதானமாக வாழ்வோம் என்று வீராப்பு பேசியதும் மறைமுகமாக ஆத்திரமூட்டக் கூடியதே. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் பேச்சுக்களும் அரசியல் ஞானமற்றவைகளாகும். அத்துடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி நாட்டில் நடந்த வன்முறைகளைக் கண்டிக்க தேசிய அரசுப் பேரவையைப் பாவிக்கத் தவறியமை குறிப்பிடத்தக்கவையாகும். அவர் திறமையான மௌனத்தைக் கடைப் பிடித்தார்.

வகுப்புவாதம் தலைதூக்கும் போதெல்லாம் முதல் முதல் பாதிக்கப்படுவது புரட்சிகர இயக்கமாகும். ஆகவே தொழிலாளி வர்க்கமும் புரட்சிகர இயக்கமும் தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி இனவெறியைத் தூண்டுவோருக்கு எதிராக விட்டுக் கொடுக்காத புனித போராட்டத்தை நடத்தி தங்களிடையே வாழ்ந்து வரும் சிறுபான்மையின மக்களைப் பாதுகாத்து, அதன் மூலம் இன்று சிதைந்துள்ள தேசிய ஐக்கியத்தை மீண்டும் படிப்படியாக கட்டியெழுப்ப வேண்டும்.

ஆரம்பத்தில் இருந்தே நாட்டுப் பிரிவினையை எதிர்த்து வரும் கட்சி என்ற வகையில் இந்த நாட்டில் நடந்து வரும் துக்ககரமான சம்பவங்கள் தமிழர் கூட்டணித் தலைவர்களை ஒரு முறையாவது சிந்திக்க வைக்கும் என நம்புகின்ருேம். இந்த நிலையை உருவாக்குவதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு முன் வந்து வழங்க வேண்டும் என்றும் அதன் மூலம் தேசிய ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அறைகூவல் விடுகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பித்தது: யாழ்ப்பாண அச்சகம் 93, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். — வெளியிடுபவர்: எஸ். தியாகராசா 9, டிமெல் வீதி கொழும்பு - 2.